இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவிடயல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக்கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் IV
இறுதிப் பரீட்சை - 2017/2018
**LWU2314/LLU4708 – அரசியலமைப்புச் சட்டம் II**
காலம்- மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 05.03.2020 | நேரம்: மு.ப.9.30 – பி.ப.12.30

தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

மொத்த வினாக்களின் எண்ணிக்கை: 8

பகுதி - I மற்றும் பகுதி – II ஒவ்வொன்றிலும் இருந்து குறைந்தபட்சம் **இரு (2)** வினாக்களைத் தெரிவு செய்து, **ஐந்து (5)** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

## பகுதி I

1. "நவீன அரசானது, சேவைகளது ஒதுக்கீடு, நிர்வாகம், உற்பத்தி மற்றும் வர்த்தகம் என்பன உள்ளடங்கலாக, பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு, அரசால் அல்லது அரசின் வழிகாட்டலின் மீது உருவாக்கப்பட்ட வணிக நிறுவனங்கள் வரிசையைக் கொண்டுள்ளது. இவ்வணிக நிறுவனங்கள் அவற்றின் உரிமையில் சட்ட நபர்களாக இருப்பினும், அவற்றின் சட்ட அங்கீகாரம் அரசில் இருந்து வேறுபட்டதுடன், பெரும்பாலும் அரசின் கொள்கைகளுக்கு அமைய இயங்குவதுடன் அல்லது அரசுடன் நெருங்கிய தொடர்புடையதுடன் அல்லது அரசின் சார்பில் செயற்பாடுகளை மேற்கொள்தல் அல்லது பெரிதும் அரசால் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது அரசால் நிதி வழங்கப்பட்டனவாக உள்ளன. பல சந்தர்ப்பங்களில், அவை பல அல்லது சகல இப்பண்புகளுக்கும் ஒத்திணங்குகின்றன. பெரும்பாலும், அரசின் பலம் மற்றும் அதிகாரம் என்பன, மக்களுடன் தொடர்புறும் போது, இவ்வணிக நிறுவன அமைப்புக்களிலேயே தங்கியுள்ளன. இவை, உண்மையாக, அரசின் முகவர்களாக அல்லது கருவியாக உள்ளமையால், அரசாங்கத்தின் சகல பாகங்களும், அரசியலமைப்பின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டும் இனம் காணப்பட்டும் உள்ள அடிப்படை உரிமைகளிற்கு மதிப்பளிக்க, பாதுகாப்பளிக்க மற்றும் மேம்படுத்த தேவைப்படுத்தும் அரசியலமைப்பின் உறுப்புரை 4(d) இன் கீழ் இன் கட்டுப்பட வேண்டியன ஆகும்."

   *Prasanna Jayawardena, PC. J in Captain Channa D.L. Abeygunewardena* Vs *Sri Lanka Port Authority* (S.C.F.R.57/2016,pp7-8)

1978 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 126 இன் கீழ் 'நிறைவேற்று மற்றும் நிர்வாக வழக்கு' எனும் பதத்தின் பரப்பெல்லை மற்றும் பிரயோகம் என்பனற்றை, மேற்குறிப்பிட்ட தீர்ப்புரையின் கீழ் ஆராய்க.

( 20 புள்ளிகள் )

2. சமன் எனும் 39 வயதுடைய தச்சர் ஒருவர் தனது மனைவி மற்றும் இரு பிள்ளைகளுடன் குருநாகலயில் வாழ்ந்தான். முந்தைய சனிக்கிழமை சமன் வேலைக்காக வெளியே சென்றிருந்த போது, சமனின் வீட்டிற்கு ஒரு பொலீஸ் அதிகாரி வருகை தந்ததுடன், விசாரணை ஒன்றிற்காக 6.30 மணிக்கு சமன் பொலீஸ் நிலையத்திற்கு சமூகமளிக்க வேண்டும் என்று குசுமாவிற்கு அறிவித்தார். சமன் வீட்டிற்கு மீள் திரும்பிய பின்னர், அவன் குசுமாவுடன் பொலீஸ் நிலையத்திற்குச் சென்றான். பொலிஸ் நிலையத்தில், வாழைப்பழக் குலை ஒன்றை திருடியமைக்காக குற்றம் சாட்டப்பட்டு அவனிற்கு எதிராக முறையீடு பதிவு செய்யப்பட்டு உள்ளதாக அவனிற்கு கூறப்பட்டது. முறையீட்டாளர்கள் அச்சமயத்தில் அங்கு சமூகமளித்திருக்காதமையால், சமனையும் குசுமாவையும் பொலிஸ் நிலையத்தை விட்டுச் செல்லுமாறு பொலிஸ் அலுவலர் கூறினார்.

மேற்குறிப்பிடப்பட்ட சம்பவம் நிகழ்ந்து மூன்று நாட்களின் பின்னர், குருநாகல பொலிஸ் நிலையத்தில் இருந்து இரு பொலிஸ் அலுவலர்கள் சமனின் வீட்டிற்குள் நுழைந்ததுடன், அவனையும் அவனது குடும்பத்தினரையும், அவமானப்படுத்தினர். பொலிஸ் அலுவலர்கள் சமனை வீட்டில் இருந்து வெளியே இழுத்து வந்ததுடன், குசுமா மற்றும் இரண்டு பிள்ளைகளது முன்னிலையில் அவனை அறைந்தனர். சமனின் மனைவி தன் கணவனை காப்பதற்கு முன் வந்ததுடன், பொலிஸ் அலுவலர்களால் அவள் தள்ளப்பட்டு காயப்படுத்தப்பட்டாள். பின்னர் சமன் ஜீப் வண்டியிற்குள் உள் தள்ளப்பட்டதுடன், ஜீப் வண்டியில் தாக்கப்பட்டான்.

அதே நாள் மாலையில், சமனின் தந்தை, சமனின் சகோதரன் சிறபாலவுடன், குருநாகல பொலிஸ் நிலையத்திற்கு சென்றனர். சமனின் தந்தையும் சகோதரனும், சமன் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளதையும், அவனது கை வீக்கமுற்று இருந்தமையால், அவர்களால் அவனிற்கு வழங்கப்பட்ட ஒரு குவளை தேநீரையேனும் அவனால் பருக முடியாமையையும் அவதானித்தனர். சில பொலிஸ் அலுவலர்கள் சமனின் தந்தையிடம் வந்து, அவரை பொலிஸ் நிலையத்தை விட்டு செல்லுமாறும், மறுநாள் காலை நீதவான் நீதிமன்றிற்கு வருமாறும் கேட்டனர்.

எவ்வாறாயினும் மறுநாள் காலை, நீதிமன்றத்திற்கு செல்ல முன்னர் சமனின் தந்தை சிறிபாலவுடன் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றனர். நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்ல மற்றைய சந்தேக நபர்கள் வரிசைப்படுத்தப்பட்டிருந்ததை அவதானித்த, போதும் சமனை காணவில்லை. அவர்கள் சமனைக் கண்டறிய பொலிஸ்

நிலையத்திற்கு சென்றதுடன், சமன் சுகவீனமடைந்ததாகவும், குருநாகல அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பொலிஸ் அலுவலர் ஒருவர் தெரிவித்தார். வைத்தியசாலைக்கு சென்ற போதும், அவர்களால் சமனை கண்டறிய முடியவில்லை. அதேவேளை, சமனின் தந்தை வைத்தியசாலையில் இருந்த தள்ளு வண்டி ஒன்றின் மேல் சமனின் உடல் இருப்பதையும் அவனது தலை பொலிதீனால் மறைக்கப்பட்டு இருந்ததையும் கண்டறிந்தார்.

1978 ஆம் ஆண்டின் இலங்கையின் அரசியலமைப்பின் கீழ் அடிப்படை உரிமைகள் வழக்கு ஒன்றை பதிவு செய்ய உமது சட்ட அறிவுரையை குசுமா நாடுகிறாள். பொருத்தமான அரசியலமைப்பு உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச் சட்டம் என்பவற்றுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

( 20 புள்ளிகள்)

3. "... அரசியலமைப்பு உறுப்புரை நலிவுறவோ அல்லது புதைவடையவோ மாட்டாது ஆயின், புதிதாக தோன்றுகின்ற பிரச்சினைகள் மற்றும் சவால்கள் என்பனவற்றிற்கு முகம் கொடுக்கக் கூடியவாறு இலகுவில் இருப்பதுடன், அரசியலமைப்பால் இயற்றப்பட்ட அடிப்படை உரிமை ஒன்றுடன் தொடர்புறுத்தி அதிக சக்தியுடன் பிரயோகிக்கிறது."

*Justice Bhagwati in Francis Coralie Mullin v. Administrator Union Territory of Delhi (A.I.R.1981 S.C.746)*

1978ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் கீழ் உயர்நீதிமன்றத்தின் அடிப்படை மனித உரிமைகள் நியாயாதிக்கத்தை மீறுவதற்கான நடபடிமுறை தேவைப்பாடுகளுடன் தொடர்புறுத்தி நீதிபதிகளால் உபயோகிக்கப்படும் நவீன அணுகுமுறைகளின் கீழ் மேலுள்ள கூற்றின் வலிதாந்தன்மையை நுணுக்கமாக கணிக்க.

(20 புள்ளிகள்)

4. கிறீன்லாந்தின் நிறைவேற்று சனாதிபதி, திரு.சூர்ய என்பவர் 300இற்கு மேற்பட்ட குடிமக்களை கொன்று அழித்து, 500இற்கு மேற்பட்டோரை காயப்படுத்திய நாட்டின் பல்வேறு சமய தலங்களில் இடம் பெற்ற தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் பின்னர், அவசரகால ஒழுங்கு விதியின் மூலம் முகத்தை முழுமையாக மூடுவதற்கு தடை விதித்தார். சாந்தியும் சமாதானமும் மிக்க சமூகம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும், தேசிய பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டும் சனாதிபதி இத் தீர்மானத்தை எடுத்துள்ளார். இஸ்லாமிய நம்பிக்கை உள்ள பாத்திமா மற்றும் பரிசா ஆகிய இரு பெண்களும், தமது முகம், உடல் இரண்டையும் மறைக்கும் முஸ்லீம்

00126

பெண்களின் பாரம்பரிய ஆடையான புர்காவை அணியத் தடை செய்யும் ஒழுங்கு விதிகளால் தமது சுய சுதந்திரம் பாதிக்கப்பட்டு உள்ளதாக முறையிட்டனர்.

இதேவேளை, கிறின்லாந்தின் வட மாகாணத்தில் உள்ள தேசிய பாடசாலையான இந்துக் கல்லூரியின் அதிபரால் தலைமை தாங்கப்பட்ட முகாமைத்துவக்குழு, மாணவர்களும் ஊழியர்களும் அபாய அணிவதில் இருந்து (அபாயா என்பது முகம், பாதங்கள் மற்றும் கைகள் தவிர்ந்த முழு உடலையும் உள்ளடக்குகிறது.) தடை செய்யும் கடிதம் ஒன்றை வெளியிட்டது. இந்துக் கல்லூரியில் முஸ்லீம் ஆசிரியரான நுஸ்லா பொதுவாக அபாயாவை தனது ஆடையாக அணிகிறாள். கடிதம் வெளியிடப்பட்டு மறுநாள், நுஸ்லா அபாயா அணிந்து பாடசாலைக்கு வந்ததுடன், பாடசாலையின் பாதுகாவலரால் அவள் உள்நுழைவதில் இருந்து தடுக்கப்பட்டாள். மேலும், அவள் வாயிலை சூழ்ந்து குழுமியிருந்த பெற்றோர்களால் சூழப்பட்டாள். அவர்கள் வெறுப்பூட்டும் வார்த்தைகளைப் பயன்படுத்தி அவளைத் துன்புறுத்தியதுடன், அவளது குடையையும் கைப்பையையும் அவளிடம் இருந்து பறிக்க முயன்றனர்.

கிறீஸ்லாந்தின் சட்ட முறைமை இலங்கையின் சட்ட முறைமையை ஒத்தது எனக் கருதி, பாத்திமா, பரிசா மற்றும் நுஸ்லா ஆகியோரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளனவா என ஆராய்க.

**( 20 புள்ளிகள் )**

## பகுதி II

5. “ அரசியலமைப்பாக்கத்தின் முக்கிய நோக்கம் ஆனது, நேர்மையான தன்னாண்மை பகுதியொன்றைக் கொண்டுள்ள அரசியல் நபராக, அரசியல் சமூகத்தின் சகல உறுப்பினரையும் பாதுகாப்பது ஆகும்.”

*Carl Friedrich*

1978ஆம் ஆண்டின் இலங்கையின் அரசியலமைப்பின் கீழ் மேலுள்ள கூற்று ஏதேனும் வலிதுடைமையைக் கொண்டுள்ளது என நீர் கருதுகிறீரா?

அரசியலமைப்பாக்கம் எனும் கருத்தேற்பின் முக்கிய பண்புகள் மற்றும், அரசியலமைப்பு சனநாயகத்திற்கான இதன் முக்கியத்துவம் என்பனவற்றின் மீது உமது விடையை விளக்குக.

**( 20 புள்ளிகள் )**

6. இலங்கையில் உள்ள X என்ற மாகாண சபை ஆனது, சுற்றாடலின் பாதுகாப்பு, முகாமைத்துவம் மற்றும் மேம்பாடு மற்றும் சுற்றாடல் தரத்தின் ஒழுங்கு முறை, பராமரிப்பு மற்றும் கட்டுப்பாடு என்பனவற்றிற்கான ஏற்பாடுகளை ஆக்கும் பொருட்டு மாகாணச் சுற்றாடல் அதிகாரசபை ஒன்றை நிறுவுவதற்காக தனியே சுற்றாடல் நியதிச் சட்டம் ஒன்றை இயற்றுவதற்கு திட்டமிடுகின்றது. அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்தின் கீழ், சுற்றாடலுடன் தொடர்புடைய உறுப்புரைகள் பின்வருமாறு:

<u>மாகாணசபை பட்டியலின் விடயம் 37</u>

பாராளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் கீழ் அல்லது அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மாகாணத்திற்குள் சுற்றாடலின் பாதுகாப்பு.

<u>ஒழுங்கிணைக்கப்பட்ட பட்டியலின் விடயம் 33</u>

சுற்றாடற் பாதுகாப்பு.

மத்திய அரசாங்கம் ஆனது 47ஆம் இலக்க 1980ஆம் ஆண்டின் தேசிய சுற்றாடல் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறு) கீழ் மத்திய சுற்றாடல் அதிகார சபையை சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் என்பவற்றிற்கான ஏற்பாடுகளை ஆக்குவதற்காக ஏலவே நிறுவியுள்ளது.

X மாகாண சபை ஆனது, அவர்களால் தனி மாகாண சுற்றாடல் நியதிச் சட்டம் இயற்றப்பட முடியுமா என உமது சட்ட அறிவுரையை நாடுகிறது. எத்தரு அறிவுரையை நீர் வழங்குவீர்? ஆராய்க.

**( 20 புள்ளிகள் )**

7. " அரசியலமைப்பானது, ஆளுநர் ஒரு மாகாணத்தின் மக்களது தேர்தல் விருப்புகளை நோக்கி இணங்காது, முதலமைச்சரின் அறிவுரையின் கீழ் செயற்படுவதை உறுதி செய்கிறது. அவர், முதலமைச்சர், சபையின் நம்பிக்கையைப் பெறுதல் நிறுத்தப்படும் போது மட்டும் அத்தகு அறிவுரைகள் பெறுவதைத் தவிர்க்கலாம். இது, இலங்கையின் அதிகாரப் பரவலாக்கத்தின் தரத்தையும் செயற்திறனையும் மேம்படுத்தும் முகமான மிக திருப்திகரமான ஏற்பாடு ஆகும்."

Felix, S.(2013). ' The Dissolution of Provincial Councils – A Comparative Analysis', in Marasinghe, J. & Wickramaratne, L.(ed) 13th Amendment: Essays on Practice, p.205

1978 ஆம் ஆண்டின் இலங்கையின் அரசியலமைப்பின் கீழ் மாகாண சபைகளின் நிறைவேற்று அதிகாரங்களுடன் தொடர்புறுத்தி மேலுள்ள கூற்றின் வலிதாந்தன்மையை நுணுக்கமாகக் கணிக்க. பொருத்தமான சட்ட எடுத்துக் காட்டுக்கள் மற்றும் உதாரணங்கள் என்பவற்றுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

**(20 புள்ளிகள் )**

8. பொது நிர்வாகம், உள்நாட்டு விவகாரங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அரசாங்கம் என்பனவற்றிற்கான அமைச்சு ஆனது, மாகாண சபைகள் முறைமை நீண்டகாலமாக பொதுமக்களின் விமர்சனத்திற்கு ஆளாகியுள்ளமையால் அதன் பலம் மற்றும் பலவீனம் என்பனவற்றை மதிப்பிடத் தீர்மானித்துள்ளது. இலங்கையில் மாகாண சபைகளது செயற்திறன் குறித்து உமது கருத்தை முன்வைக்குமாறு நீர் அமைச்சால் வேண்டப்படுகிறீர்.

பின்வருவன மீது கவனம் செலுத்தி அமைச்சிற்கு அறிக்கை ஒன்றை எழுதுக.

(அ) மாகாண சபையின் சட்டவாக்க அதிகாரம்

(ஆ) மாகாண சபையின் நிறைவேற்று அதிகாரம்

(இ) மாகாண சபையின் நீதியியல் அதிகாரம்

பொருத்தமான நியதிச் சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச் சட்டம் என்பவற்றுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

**( 20 புள்ளிகள் )**

**பதிப்புரிமை பெற்றது.**